4. அறிவிப்பு

மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி—சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் கீழ்க்கண்ட சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1984).

2. 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1984).

3. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1984).

5. கவன ஈர்ப்புகள்.

(அ) கோவை வட்டம், பாலமலைச் சாலையை செப்பனிடுதல்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, ''கோவை வட்டம், பெரிய நாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் உள்ள பாலமலை எனப்படும் ஆதிவாசிகள் குடியிருப்புகளுக்குள்ள பழுதுபட்ட சாலையை அபிவிருத்தி செய்யும் பணியை வனத்துறையினர் தடுத்துள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத் திற்குட்பட்ட பாலமலை கோவில் வரை உள்ள பாதையை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செப்பனிட்டு அப் பகுதியில் உள்ள ஆதிவாசிகளுக்குப் போக்குவரத்து வசதி செய் வதை வன இலாகாவினர் தடுப்பதாகவும், அதனால் வன இலா காவுக்கு அவசர உத்தரவு வழங்கும்படியும் திரு. மா. சின்னராசு சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து வேண்டுகோள் வந்தது.